

Botanical Name : **Wedelia chinensis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | மஞ்சள் கரிசாலை |
| Hindi Name | : | Kesraj, Bangra |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Cough, Jaundice, for Dyeing Hair, Tonic, Uterine Haemorrhages<br>இருமல், காமாலை, முடிகருமை, உரமாக்கி, கர்ப்ப கோளாறுகள் |

Propagation Planting Material by : Stem Cuttings

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Feet X 1 Feet |
| Duration of Crop | : | 5 Months |
| Grown Area | : | Cultivated in Kancheepuram & Cuddalore Dist. |

**மஞ்சள் கரிசாலை :** இதன் இலைச்சாறு, நல்லெண்ணெய் சமயெடை எடுத்து தைலமாக வடித்து (5கி) சாப்பிட்டு வர இருமல் போகும். இலைச்சாற்றை நல்லெண்ணெய் (அ) தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலைக்கு தேய்த்து வர முடி கறுப்பாக வளறும். கரிசாலை சாற்றால் துணியை நனைத்து அந்த துணியை வெயிலில் உலர்த்தி திரியாய் செய்து விளக்கெண்ணெய் ஊற்றி எரித்து மேலே ஒரு அகலால் மூடி படியும் கரியை எடுத்து வைத்துக்கொண்டு விளக்கெண்ணெயுடன் குழைத்து கண் மையாக பயன்படுத்தலாம். இது சிறந்த மூலிகை மை ஆகும்.



Botanical Name : **Withania somnifera (Cultivation)**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | அமுக்கிரா கிழங்கு |
| Hindi Name | : | Ashwagandha |
| Part Used | : | Roots, Leaves |
| Uses | : | Nervine Tonic, Aphrodisiac<br>நரம்பு உரமாக்கி, ஆண்மைப் பெருக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Feet X 1 Feet |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Cultivated as Trail Source Plots by Tamil Nadu Agriculture University, Coimbatore & Salem |

**அமுக்கிரா கிழங்கு :** இலையை விதிப்படி குடிநீர் செய்து கொடுக்க சுரம் தணியும். இதன் கிழங்கை சுக்குடன் சேர்த்து வெந்நீர் விட்டு அரைத்து வீக்கங்களுக்கு போட கரையும். இதன் கிழங்கை பாலில் வேக வைத்து உலர்த்தி பொடி செய்து ஒருவேளைக்கு இரண்டு முதல் நான்கு கிராம் வரை தேனில் கலந்து கொடுக்க வீக்கம், பசியின்மை உடல் பருமன் போகும். இதனை நெய்யுடன் கலந்து கொடுக்க பெருமூச்சு நீங்கும். ஒரு ஸ்பூன் அமுக்கரா பொடியை ஒரு டம்ளர் சூடான பாலில் கலந்து குடித்து வர உடல் வலி குறையும்.



Botanical Name : **Abrus precatorius**

| | | |
|---|---|---|
| Habit | : | **Climbing Shrub** |
| தமிழ் பெயர் | : | குன்றிமணி |
| Hindi Name | : | Ratti |
| Part Used | : | Leaf, Seed, Root |
| Uses | : | Emetic<br>வாந்தியுண்டாக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Fencing / Border Crop |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**குன்றிமணி :** எண்ணெயுடன் இலைச்சாறு சேர்த்து வலியுள்ள வீக்கங்களுக்கு தடவிவர வீக்கம் குறைந்து வலி நீங்கும். இலைச்சாறு இரண்டு பங்கு, கரிசாலை சாறு நான்கு பங்கு எண்ணெய் நான்கு பங்கு சேர்த்து காய்ச்சி தலை மூழ்கி வர தலைக்கு குளிர்ச்சி தரும்.



Botanical Name : **Abutilon indicum**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | துத்தி |
| Hindi Name | : | Kanghani, Kanghi |
| Part Used | : | Leaves |
| Uses | : | Nervine Tonic, Aphrodisiac, Piles<br>நரம்பு உரமாக்கி, காமம் பெருக்கி, மூலம் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**துத்தி :** இலையை ஆமணக்கு நெய் விட்டு வதக்கி ஒற்றடம் கொடுத்து கட்ட மூலம் நீங்கும். இலையை கொதிக்கின்ற தண்ணீரில் போட்டு வேகவைத்து தண்ணீரில் தோய்த்து பிழிந்து ஒற்றடம் கொடுக்க வலிகள் தீரும். இலையை குடிநீர் செய்து வாய் கொப்பளிக்க பல் ஈறுகளில் உண்டாகும் நோய்கள் நீங்கும். துத்தி இலையை கீரையாக சமைத்து வாரம் இருமுறை உண்டு வர மூலத்தின் குறிகள் குறையும்.



Botanical Name : **Acacia sinuata**

| | | |
|---|---|---|
| Habit | : | **Climber** |
| தமிழ் பெயர் | : | சீயக்காய் |
| Hindi Name | : | Ritha |
| Part Used | : | Pod, Fruits |
| Uses | : | Anthelmintic, Leucoderma, Haemorrhoids, Eczema<br>புழுக்கொல்லி, வெண்புள்ளி, மூலம், கரப்பான் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Collection |
| Duration of Crop | : | Perennial Source |
| Grown Area | : | Western Ghats and all Hill Stations of<br>Tamil Nadu Forest |

**சீயக்காய்:** காய வைத்து அரைத்து தேய்த்து தலைக்கு குளித்து வர கூந்தலில் உள்ள எண்ணெய் பசை போகும். முடி கறுத்து வளரும். இதன் கொழுந்துடன் உப்பு, புளி, மிளகு, மிளகாய் சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டால் காமாலை தீரும். இக்கொழுந்துடன் தக்க அளவு மிளகும் ஒரு திரி பூண்டும் சேர்த்தரைத்து உண்ண மலச்சிக்கல், சுரம் நீங்கும்.



Botanical Name : **Acalypha indica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | குப்பைமேனி |
| Hindi Name | : | Kuppu, Khokali |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Diuretic, Skin Diseases, Tooth Ache, Ulcers<br>சிறுநீர் பெருக்கி, தோல் நோய்கள், பல் வலி, நாள்பட்ட புண்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Collection |
| Duration of Crop | : | 3 Months |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu |

**குப்பைமேனி :** இலையை பொடித்து பூண்டையும் சேர்த்தரைத்து உட்கொள்ள மலப்புழுக்கள் வெளிப்படும். இலையையும் உப்பையும் சேர்ததரைத்து உட்கொள்ள சொறி, சிரங்கு குணமாகும். இதன் இலையின் சாற்றுடன் சுண்ணாம்பு சேர்த்து காணாக்கடி வீக்கத்திற்கு போடலாம்.



Botanical Name : **Achyranthes aspera**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | நாயுருவி |
| Hindi Name | : | Chirchira |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Skin Diseases, Asthma, Bronchitis<br>தோல் நோய்கள், நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Collection |
| Duration of Crop | : | 3 Months |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu |

**நாயுருவி :** வேர் சாம்பலுடன் வெல்லம் கலந்து சாப்பிட்டால் எளிதில் பிரசவம் உண்டாகும். விதையை அரிசி கழுவின நீருடன் உட்கொள்ள மூலம் குணமாகும், பச்சை வேரில் பல் துலக்க பல் அழுக்கு நீங்கும்,



Botanical Name : **Acorus calamus**

Habit : **Herb**

தமிழ் பெயர் : வசம்பு

Hindi Name : Bach

Part Used : Rhizome

Uses : Carminative, Germicide, Best Medicine for Children

அகட்டுவாய்வகற்றி, நுட்புழுக்கொல்லி,

குழந்தை நோய்களுக்கு சிறப்பான மருந்து.

Propagation Planting Material by : Cuttings, Seedlings

Espacement : 1 Feet X 1 Feet

Duration of Crop : 10 Months

Grown Area : River beds & Water Shed area of forests in Tamil Nadu

**வசம்பு :** வசம்பினை சுட்டு தேனிற் குழைத்து, விடியற்காலை தோறும் உட்கொண்டுவரின் நாக்குப்பிறழ்ச்சி, தெத்துவாய், செரியாமை, கழிச்சல், வயிற்றுப் பொருமல், சுரம் குணமாகும் காய்ச்சுக்கட்டி வசம்பை சேர்த்து நீர் விட்டு அரைத்து பற்றிட நாட்பட்ட கீல்வாத நோய்கள் குணமாகும்.



Botanical Name : **Aegle marmelos**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | வில்வம் |
| Hindi Name | : | Bel |
| Part Used | : | Leaves, Fruit, Root |
| Uses | : | Febrifuge, Astringent, Refrigerant, Stomach Ulcers<br>வெப்பகற்றி, துவர்ப்பி, குளிர்ச்சியுண்டாக்கி, வயிற்றுப் புண் நோய்களுக்கு சிறப்பானது. |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | 1 Year / Perennial Source |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**வில்வம் :** இலை 1க்கு நீர் 4 பங்கு கூட்டி நாலிலொன்றாக வடித்த குடிநீர், வயிற்றுக் கடுப்பு, மகாவாயு இவற்றைப் போக்கும். சுரத்திற்கும் கொடுக்கலாம். இலைச்சாறைப் பிழிந்து, உடனே அதில் மிளகுத்தூள் சிறுது சேர்த்துக் கொடுக்க சோபை, காமாலை தீரும். மேற்படி சாறுடன் நீர் அல்லது தேன் கூட்டிக் கொடுக்க, மூக்குநீர் பாய்தலும், சுரமும் போகும். ஒரு முறை கழியச்செய்யும். காயினை பசுவின் பால் விட்டு அரைத்து தலைக்கு தேய்த்து நீராட மண்டைச் சூடு, கண் எரிச்சல் நீங்கும்.



Botanical Name : **Aerva lanata**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | **சிறுகண்பீளை** |
| Hindi Name | : | Gorakhganj |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Urinary Calculi, Dysuria<br>**சிறுநீரகக் கல் கரைச்சி, சிறுநீர் பெருக்கி** |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Collection |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**சிறுகண்பீளை :** கஞ்சி வகைகள் ஒன்றில் இதன் வேரை சேர்த்து காய்ச்சிக் குடித்துவர சூல்கொண்ட பெண்களுக்கு வலுவை தரும். இதன் வேர்ப்பட்டை பனை வெல்லம் ஒரு பலம் கூட்டி மைபோல் அரைத்து அரை ஆழாக்கு பசுவின் பாலில் கலந்து காலை – மாலை உட்கொள்ள கல்லடைப்பு, நீரடைப்பு, பெரும்பாடு நீங்கும். செடியை பறித்து காய வைத்து அரைத்து கஷாயம் வைத்து கொடுக்க சிறுநீர் நன்றாக இறங்கும்.



Botanical Name : **Ailanthus excelsa**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | பெருமரம் |
| Hindi Name | : | Jangli Sarva |
| Part Used | : | Bark, Stem |
| Uses | : | Contraceptive, Post - Partum Treatment<br>கருத்தடை மருந்திலும், பிள்ளைப் பேற்றிக்குப் பிறகு கொடுக்கும் மருந்திலும் சேர்க்கப்படும் முக்கிய மரம் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial Source |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**பெருமரம் – பீநாறிமரம் :** விதையின் எண்ணெய் உப்பு கட்டியும் வெளியில் பூசி வந்தால் சொறி, சிரங்கு குணமாகும். இலை, பட்டை முதலியவைகளை முறைப்படி குடிநீர் செய்து கொடுக்கும் சுரம் தணியும். சிறுநீரை பெருக்கும்.



Botanical Name : **Alangium salvifolium**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | அழிஞ்சில் |
| Hindi Name | : | Akola |
| Part Used | : | Fruit, Bark |
| Uses | : | Anthelmintic, Skin Diseases, Urinary Disorders<br>புழுக்கொல்லி, தோல் நோய்கள், சிறுநீரக நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source only in plains |

**அழிஞ்சில் :** இப்பட்டையை நுண்ணியதாக பொடி செய்து கொண்டு தூவி வர மேகப்புண், பெருநோய், சொறி – சிரங்கு குணமாகும். 4 முதல் 8 கிராம் எடுத்துக் கழுநீரில் அரைத்து சிறிது தேன் விட்டு கலந்து கொடுக்க செரியா கழிச்சில் நீங்கும்.



Botanical Name : **Albizia lebbeck**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | வாகை |
| Hindi Name | : | Siris |
| Part Used | : | Wood |
| Uses | : | Asthma, Thoracic Pain, Skin Diseases, Wounds, Ulcers<br>இருமல், தோல் நோய், நாள்பட்ட புண்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**வாகை :** இலையை அரைத்து கண் நோய்களுக்கு கண்களின் மீது வைத்து கட்டலாம். பூவை அரைத்து கட்டி, தடிப்பு, வீக்கம், இவைகளின் மீது பூசிவர அவைகள் போகும். வேர் பட்டையை பொடித்து பல் துலக்க, பல் ஈறு புண் நீங்கும், பல் இறுகும். விதையை நீரில் அரைத்து நெறிகட்டிகளின் மீது பூசலாம். பூவை குடிநீர் செய்து பாம்பு கடிகளுக்கு வழங்கலாம்.



Botanical Name : **Alpinia galanga**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | பேரரத்தை |
| Hindi Name | : | Bara Kulanjan |
| Part Used | : | Rhizomes |
| Uses | : | Asthma, Bronchitis, Hiccough<br>நுரையீரல் நோய்களுக்கு சிறப்பானது. |

Propagation Planting Material by : Seedlings

| | | |
|---|---|---|
| Espacement | : | 3 Feet X 3 Feet |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Shola Forest area of Tamil Nadu |

**பேரரத்தை :** இது தொண்டையில் இருக்கும் கபத்தை போக்கும். இது உடல் வலி, சுரம், தலை புண், தலையின் நீரேற்றம் ஆகியவற்றை போக்கும்.



Botanical Name : **Alstonia scholaris**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | ஏழிலைப்பாலை |
| Hindi Name | : | Datyuni |
| Part Used | : | Bark, Leaves |
| Uses | : | Fever, Asthma, Bronchitis<br>சுர நோய்கள், நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**ஏழிலைப்பாலை:** இதன் வேரை உலர்த்தி பொடி செய்து அரை ஸ்பூன் அளவு கொடுக்க நுண்புழு, குன்மம், புண் ஆகியவை தீரும்.



Botanical Name : **Alternanthera sessilis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | பொன்னாங்கன்னி |
| Hindi Name | : | Garundi, Guroo |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Cooling Agent, Liver Tonic<br>குளிர்ச்சியுண்டாக்கி, ஈரல் தேற்றி |

Propagation Planting Material by : Cuttings

| | | |
|---|---|---|
| Espacement | : | 30 CM X 30 CM |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**பொன்னாங்கண்ணி :** உப்பு இல்லாமல் வேகவைத்து வெண்ணெயிட்டு 40 நாள் உண்ண கண்ணில் உண்டாகும் நோய் தீரும். இதனை மிளகு உப்பு கூட்டி புளியை நீக்கி கற்ப முறையின்படி ஒரு மண்டலம் உட்கொள்ள உடலுக்கு அழகு பொன்நிறம் நீண்ட ஆயுள் கண்குளிர்ச்சி இவற்றை தரும். இதன் கீரை ஈரல் நோய் கீழ் வாயில் உண்டாகும் நோய்கள் போகும். வாரம் இருமுறை கீரையாக செய்துண்ண கண் ஒளி பெருகும்.



Botanical Name : **Anona squamosa**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | சீத்தாபழம் |
| Hindi Name | : | Sita Phal |
| Part Used | : | Fruit |
| Uses | : | Anemia, Ulcer<br>இரத்த சோகை, வயிற்றுப் புண் ஆற்றும் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 3 Mts. X 3 Mts. |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu & Part of Patta Land of Farmers |

**சீத்தா :** இதன் இலை சாற்றை மூக்கில் பிழிய, மயக்கம் போகும். விதையை பொடித்து புண்களின் மீது தூவ புண்களில் உள்ள அழுக்கை நீக்கி அவைகளை எளிதில் ஆற்றும். இதன் பழம் வெப்பத்தை தணிக்கும். இதன் இலையை உள்ளுக்குக் கொடுக்க புழுக்களைக் கொன்று வெளிப்படுத்தும்.



Botanical Name : **Argemone mexicana**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | பிரமதண்டு |
| Hindi Name | : | Pila-Dhatura |
| Part Used | : | Seeds |
| Uses | : | Leporosy<br>தோல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**குடியோட்டி பூண்டு :** விதையைத் தூள் செய்து 4 கிராம் எடை எடுத்து தேன் அல்லது சர்க்கரை கலந்து தினம் மூன்று வேளை கொடுத்துவர இருமல் மார்புசளி போகும். விதையைப் பொடித்து புகைத்து புகையை வாயில் கொள்ள பல்வலி, பல்சொத்தை தீரும். இதன் வேரை பொடித்து 4.2 கிராம் கொடுக்க தட்டைப் புழு விழும். இதன் சாறுக்கு சிறுநீரைப் பெருக்கும் செய்கை இருப்பதால் இதனை ரத்த சோகை நோய்க்கு கொடுக்கலாம். இதன் பாலை கண்ணில் இட கண்ணில் உண்டாகும் சிவப்பு வலி, கூச்சம் நீர் வடிதல் இவை குணமாகும்.



Botanical Name : **Aristolochia bractealata**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | ஆடு – திண்ணா – பாலை |
| Hindi Name | : | Kiramar |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Anti - Inflammatory<br>வீக்கமுருக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 30 CM X 30 CM |
| Duration of Crop | : | 5 Months |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**ஆடுதீண்ணாப்பாளை :** உலர்ந்த இலையை ஊறல் குடிநீர் செய்த கொடுக்க நுண்புழுக்கள் சாகும். வேரை அரைத்து 4.2 கிராம் கொடுக்க பாம்பு நஞ்சு முறியும்.



Botanical Name : **Aristolochia indica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | ஈஸ்வர மூலி |
| Hindi Name | : | Isharmul |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Wounds, Fever<br>புண்களுக்கு சிறப்பானது, காய்ச்சல் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 30 CM X 30 CM |
| Duration of Crop | : | 5 Months |
| Grown Area | : | Distribution is common in all over the districts of Tamil Nadu - Wild Source |

**ஈஸ்வர மூலி :** இதன் இலை வீக்கம் குளிர்சுரம், இருதயநோய், சொறி–சிரங்கு தேமல் இவைகளைப் போக்கும். இதன் இலைச்சாறு அனைத்து நஞ்சுகளையும் போக்கும் குணமுடையது. இதன் வேரினால் பித்தம், இருமல், சுரம், உடல்வலி, விஷக்கடி நீங்கும்.